# வெனிசூலாவில் அதிபருக்கு எதிரான வாக்குப் பதிவு: மர்ம நபர்கள் துப்பாக்கி சூடு

கராகஸ், ஜூலை 17–

தென் அமெரிக்க நாடான வெனிசுலாவில் அதிபர் நிகோலஸ் மதுரோவுக்கு எதிராக பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர் பதவி விலக வலியுறுத்துகின்றனர். இப்போராட்டம் கடந்த ஏப்ரல் முதல் நடைபெற்று வருகிறது.

அதில் ஏற்பட்ட வன்முறை சம்பவங்கள் மற்றும் போலீஸ் ராணுவம் நடத்திய தாக்குதல்களில் இதுவரை 100க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். இருந்தும் போராட்டம் ஓயவில்லை. பலவிதங்களில் தொடர்ந்து நடந்து வருகிறது.

இந்த நிலையில் அதிபருக்கு எதிராக நேற்று எதிர்கட்சிகள் பொதுவான வாக்கெடுப்பு நடத்தினார்கள். அதற்காக தலைநகர் கராகசில் வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன.

அங்கு ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வாக்குபோட நீண்ட 'கியூ' வரிசையில் நின்று கொண்டிருந்தனர். அப்போது மோட்டார் சைக்கிளில் சிலர் கும்பலாக வந்தனர்.

பின்னர் திடீரென அவர்கள் ஓட்டு போட வரிசையில் நின்று கொண்டிருந்த பொதுமக்கள் மீது சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர். இதனால் கூட்டத்தினர் சிதறி ஓடினர். உயிர் பிழைக்க அருகேயுள்ள கிறிஸ்தவ தேவாலயத்துக்குள் பதுங்கி கொண்டனர்.

இதற்கிடையே, மர்ம நபர்கள் சுட்டதில் 4 பேர் படுகாயம் அடைந்து ரத்த வெள்ளத்தில் மயங்கி கிடந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு சிசிச்சை பலனின்றி ஒரு பெண் பரிதாபமாக உயிரிழந்தார். மற்ற 3 பேருக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இத்தாக்குதலை அதிபர் மதுரோவின் ராணுவம் நடத்தியதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

# அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி.எஸ்சி. வேளாண் படிப்புக்கான தரவரிசைப் பட்டியல் வெளியீடு

சிதம்பரம், ஜூலை 17–

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி.எஸ்சி., வேளாண்மை, தோட்டக்கலை படிப்புகளில் சேருவதற்கான தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டது.

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக பி.எஸ்சி. வேளாண்மை, பி.எஸ்சி. வேளாண்மை (சுய நிதி), பி.எஸ்சி. தோட்டக்கலை ஆகிய படிப்புகளில் சேருவதற்கான விண்ணப்பங்கள் இணையதளம் மூலம் 8.5.2017 முதல் 31.5.2017 வரை பதிவு செய்யப்பட்டன.



பி.எஸ்சி., வேளாண்மை படிப்புக்கு 13,754 விண்ணப்பங்களும், பி.எஸ்சி., வேளாண்மை (சுயநிதி) படிப்புக்கு 2,082 விண்ணப்பங்களும், பி.எஸ்சி., தோட்டக்கலை படிப்புக்கு 1,102 விண்ணப்பங்களும் பதிவு செய்யப்பட்டன.

இவற்றில் 322 பி.எஸ்சி., வேளாண்மைப் படிப்புக்கான விண்ணப்பங்களும், 52 வேளாண்மை (சுயநிதி), 14 தோட்டக்கலை விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டன. இந்த படிப்புகளுக்கு "சமவாய்ப்பு' எண்கள் (Random Number) 7–ந் தேதி அன்று வழங்கப்பட்டன.

தரவரிசைப் பட்டியல் வெளியிடும் நிகழ்ச்சி பல்கலைக்கழக நிர்வாக அலுவலகக் கட்டடத்தில் நடைபெற்றது.

மாணவர் சேர்க்கை ஆலோசகர் தி.ராம்குமார் வரவேற்றார். பி.எஸ்சி., வேளாண்மை படிப்புக்கான தரவரிசைப் பட்டியலை துணைவேந்தர் செ.மணியன் வெளியிட்டார். பி.எஸ்சி., வேளாண்மை (சுயநிதி) படிப்புக்கான தரவரிசைப் பட்டியலை ஆட்சி மன்றக்குழு உறுப்பினர் கே.ஏ.பாண்டியன் எம்எல்ஏ வெளியிட்டார். பி.எஸ்சி., தோட்டக்கலை படிப்புக்கான தரவரிசைப் பட்டியலை ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் எம்.உமாமகேஸ்வரன் வெளியிட்டார்.

மாணவர்கள் பல்கலைக்கழக இணையதளமான www.annamalaiuniversity.ac.in இல் தங்களது தரவரிசையை தெரிந்து கொள்ளலாம்.

பி.இ. படிப்புக்கான சமவாய்ப்பு எண் வெளியீடு

மேலும், பி.இ. படிப்புக்கான "சமவாய்ப்பு' எண்களை பல்கலைக்கழகப் பதிவாளர் க. ஆறுமுகம், இளநிலை மீன்வள (பிஎஃப்எஸ்சி) படிப்புக்கான "சமவாய்ப்பு' எண்களைத் தேர்வுக்கட்டுப்பாட்டு அதிகாரி ராம.சந்திரசேகரன், இளநிலை தொழில்முறை சிகிச்சை (பிஓடி) படிப்புக்கான "சமவாய்ப்பு' எண்களை வேளாண்புல முதல்வர் வி.ரவிச்சந்திரன், இளநிலை இயற்பியல் சிகிச்சை (பிபிடி) படிப்புக்கான "சமவாய்ப்பு' எண்களை கல்வியியல் புல முதல்வர் ஆர்.பாபு ஆகியோர் வெளியிட்டனர்.

மாணவர்கள் முற்றிலும் தகுதியின் அடிப்படையிலேயே சேர்க்கைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

மாணவர்கள், மேல்நிலை படிப்பு அல்லது அதற்கு இணையான படிப்பில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையிலும், தமிழக அரசின் இட ஒதுக்கீடு விதிகளின்படியும் சேர்க்கைக்கான பட்டியல் தயார் செய்யப்பட்டு கலந்தாய்வுக்கு அழைக்கப்படுவார்கள்.

மாற்றுத்திறனாளிகளுக்கு 3% சதவீத இடங்கள் தமிழக அரசின் விதிப்படி ஒதுக்கப்படும். மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

கலந்தாய்வு அட்டவணை, கலந்தாய்வுக்கான அனுமதிக் கடிதத்தைத் தகுதியுள்ள மாணவர்கள் பல்கலைக்கழக இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து, கலந்தாய்வில் பங்கேற்கலாம். தனியாக கலந்தாய்வுக் கடிதம் அனுப்பப்படமாட்டாது.

நிகழ்ச்சியில் தொலைதூரக் கல்வி இயக்கக இயக்குனர் எம். அருள் மற்றும் புல முதல்வர்கள், துறைத் தலைவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாணவர் சேர்க்கை ஆலோசகர் டி.ராம்குமார் செய்திருந்தார்.

### 1020 இடங்களுக்கு அனுமதி சேர்க்கை

பின்னர், துணைவேந்தர் செ.மணியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:–

2017–18–ம் கல்வி ஆண்டில் பி.இ. மொத்தம் 1,020 இடங்களுக்கு அனுமதி சேர்க்கை நடைபெறும். மொத்தம் 1,655 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. பிஓடி படிப்புக்கு 30 இடங்களிலும், பிபிடி படிப்புக்கு 30 இடங்களிலும் அனுமதி சேர்க்கை செய்யப்படும்.

பி.எஸ்சி., வேளாண்மைப் படிப்பில் தரவரிசைப் பட்டியலில் குன்னத்தைச் சேர்ந்த மாணவி ஸ்ரீஜெயபிரியா முதலிடத்தையும் (கட் ஆப் 199.75), நாமக்கல் மாணவி பி.கே.இந்துமதி இரண்டாம் இடத்தையும் (கட் ஆப் 199.5), ஊத்தங்கரை மாணவி எம். சிவரஞ்சனி மூன்றாமிடத்தையும் (கட் ஆப் 199.00) பெற்றுள்ளனர்.

பி.எஸ்சி., வேளாண்மை (சுயநிதி) படிப்புக்கு சேலம் மாணவி எம். கீதாம்பரி (கட் ஆப் 196.5) முதலிடத்தையும், ஒசூர் மாணவி டி.சுனந்தரா (கட் ஆப் 195.25) இரண்டாமிடத்தையும், குன்னம் மாணவி டி.ஜெயமுனி (கட் ஆப் 195) மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

பி.எஸ்சி., தோட்டக்கலை படிப்புக்கு மேட்டூர் மாணவர் எஸ்.ஜெகபிரதீன் (கட் ஆப் 195) முதலிடத்தையும், உதகையைச் சேர்ந்த மாணவர் எஸ்.நித்தீஷ் (கட் ஆப் 198) இரண்டாமிடத்தையும், அரூர் மாணவர் வி.ரமேஷ்குமார் (கட் ஆப் 196.25) மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

பி.எஸ்சி., வேளாண்மை, பிஎஸ்சி தோட்டக்கலை படிப்புகளுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ.37,430, பி.எஸ்சி., வேளாண்மை (சுயநிதி) படிப்புக்கு ஆண்டுக்கட்டணம் ரூ. 1 லட்சத்து 20 ஆயிரம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# அமுதகவி உமறுப்புலவர் மணிமண்டபத்தில் அரசு விழா: ஊர்மக்கள் மகிழ்ச்சி நன்றி

சென்னை, ஜூலை 17–

**அமுத கவியரசு உமறுப்புலவர் விழா, தமிழக அரசு சார்பில் எட்டயபுரம் அமுதகவி உமறுப்புலவர் மணிமண்டபத்தில் அரசு விழாவாக கொண்டாடப்படும் என செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கடம்பூர் செ.ராஜு அறிவிப்புக்கு ஊர்ப்பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர்.**

கவியரசு உமறுப்புலவர் தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் 1642–ம் ஆண்டு ஹிஜிரி, 1052 இல் ரப்பியுலவ்வல் மாதம் பிறை 14–ல் பிறந்தார். சிறு வயதிலேயே இலக்கண, இலக்கிய, கவிநிகண்டு பயின்று முதன்நிலை மாணவராக விளங்கினார். அன்னாரது இறையருட் கவிபாடும் திறன்கண்ட எட்டயபுரம் மன்னர் இவரை அரசவை புலவராக நியமித்தார். பின்னர் உலகப்புகழ்பெற்ற செயற்கரிய சீறாப்புராணம் காவியத்தை இந்த உலகிற்கு தந்தார். அமுதகவியரசு உமறுப்புலவர் கி.பி.1703இல் எட்டயபுரத்தில் இறந்து நல்லடக்கமானார்.

மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா அரசியல் மற்றும் ஆன்மீகத்தில் அதிக ஈடுபாடு கொண்டதோடு தமிழுக்கு தொண்டாற்றியவர்களின் புகழை உலகறியச்செய்தார். சுதந்திரப்போராட்ட வீரர்கள், வீரத்திருமகன்கள், இசைமேதைகள் மற்றும் தமிழுக்கு தொண்டாற்றியவர்களுக்கு மணிமண்டபங்கள், நினைவு இல்லங்கள் அமைத்து அவர்களுக்கு அரசு விழா எடுத்து அவர்களின் சுதந்திரப்போராட்ட உணர்வுகள், அர்பணிப்பு, தமிழ்தொண்டு மற்றும் அவர்களின் தியாகங்களை அனைத்து தரப்பு மக்களும் அறிந்து கொள்ளச்செய்தார்.

எட்டயபுரம் ஊர்ப்பொதுமக்கள் பல ஆண்டு காலமாக அன்னாரின் பிறந்த நாள் விழாவை அரசு விழாவாக அறிவிக்கவேண்டும் என கோரிக்கை விடுத்தனர். ஊர்ப்பொதுமக்களின் 40 ஆண்டுகால கோரிக்கையை ஏற்று கடந்த சட்டப்பேரவை கூட்டத்தொடரின் போது செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கடம்பூர் செ.ராஜுவால் அமுதகவியரசு உமறுப்புலவரின் விழா தமிழ்நாடு அரசின் சார்பில் அரசு விழாவாக இனி வரும் காலங்களில் கொண்டாடப்படும் என அறிவிக்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழிலும் வெளியிடப்பட்டுள்ளது.

அதனையொட்டி எட்டயபுரம் அமுதகவியரசு உமறுப்புலவர் மணிமண்டபத்தில் செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கடம்பூர் செ.ராஜுக்கு எட்டயபுரம் ஊர்பொதுமக்கள் சார்பில் பொன்னாடை போர்த்தி நன்றி தெரிவிக்கப்பட்டது. பின்னர் அமைச்சர் கடம்பூர் செ.ராஜு அன்னாரது நினைவு சமாதியில் மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தினார்.



முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், சென்னை கொடுங்கையூரில் உள்ள பேக்கரியில் ஏற்பட்ட தீ விபத்தில் காயமடைந்து சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையிலும் மற்றும் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டுள்ள தீயணைப்பு வீரர்கள் மற்றும் பொது மக்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, காயமடைந்தவர்களுக்கு அளித்து வரும் சிகிச்சை குறித்து மருத்துவர்களிடையே கேட்டறிந்தார். அவைத் தலைவர் இ.மதுசூதனன், முன்னாள் அமைச்சர்கள் கே.பி.முனுசாமி, க. பாண்டியராஜன் எம்.எல்.ஏ., சண்முகநாதன் எம்.எல்.ஏ. மனோஜ்பாண்டியன், ஓ.கே.சின்னராஜ் எம்.எல்.ஏ. மாணிக்கம் எம்.எல்.ஏ. ஆகியோர் உடனிருந்தனர்.





# அய்யங்கார்குளம் கைலாசநாதர் கோயில் கும்பாபிஷேகம்

காஞ்சீபுரம், ஜூலை 17–

காஞ்சீபுரம் அருகே அய்யங்கார்குளம் கிராமம் மற்றும் செங்குந்த மரபினர் நால்வர் நற்பணி மன்றத்தினர் சார்பில் பிரசித்தி பெற்ற கைலாசநாதர் கோயில் கும்பாபிஷேகம் 19 ஆண்டுகளுக்கு பிறகு நேற்று வெகு சிறப்பாக நடந்தது.

முன்னதாக பல்வேறு நதிகளிலிருந்து கொண்டு வரப்பட்ட புனித நீரை கோபுர கலசத்தில் ஊற்றினார்கள். அப்போது திரண்டிருந்த பக்தர்கள் ''சிவ சிவா...'' என்ற பக்தி கோஷங்களை எழுப்பினார்கள். பிறகு பக்தர்களுக்கு கும்பாபிஷேக நீர் தெளிக்கப்பட்டது.

முன்னதாக கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், தனபூஜை, வாஸ்து சாந்தி, கோபூஜை உள்பட பல்வேறு பூஜைகளும், ஹோமங்களும் நடந்தது.

இந்த கும்பாபிஷேகத்தில் காஞ்சீபுரம் மாவட்ட கழக செயலாளர் வாலாஜாபாத் பா.கணேசன், ஜெயலலிதா பேரவை செயலாளர் கே.யூ.எஸ். சோமசுந்தரம், மாவட்ட மாணவரணி செயலாளர் வீ.வள்ளிநாயகம், காஞ்சீபுரம் நகர கழக செயலாளர் என்.பி.ஸ்டாலின், கோயில் நிர்வாகிகள் கோ.பெருமாள், சந்திரசேகர், நடராஜன், மின்சாரத்துறை உயர் அதிகாரி மோகனவேல், கோயில் அர்ச்சகர் எஸ்.சிவக்குமார் குருக்கள், கோயில் நிர்வாக அதிகாரிகள் ஆ.குமரன், மா.வெள்ளைச்சாமி, வேலரசு, மேலாளர்கள் சுரேஷ், ரகு, மோகன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கும்பாபிஷேக ஏற்பாடுகளை கோயில் நிர்வாக அதிகாரி ஆ.குமரன் செய்திருந்தார். வந்திருந்த பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.



## பெயர் மாற்றம்

KM ASATHA CHATURVEDI, தந்தை பெயர்: Prabhat Kumar Chaturvedi, பிறந்த தேதி: 15.07.1993, D3, MIG Flats, ஃபோர் ஷோர் எஸ்டேட், சென்னை–600 028, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **ASATH CHATURVEDI,** என்று அழைக்கப்படுகிறேன்.

**KM ASATHA CHATURVEDI**



# வீட்டின் மேற்கூரை இடிந்து காயமடைந்த பெண்ணின் மருத்துவ செலவுக்கு பண உதவி செய்த சப்–இன்ஸ்பெக்டர்

## கமிஷனர் விசுவநாதன் வெகுமதி வழங்கி பாராட்டு

**சென்னை, ஜூலை 17–**

**மழையின் காரணமாக வீட்டின் மேற்கூரை இடிந்து விழுந்ததில் காயமடைந்த பெண்ணை மீட்டு மருத்துவமனையில் சேர்த்து ஸ்கேன் எடுக்க பண உதவி செய்த சிறப்பு உதவி ஆய்வாளருக்கு போலீஸ் கமிஷனர் விசுவநாதன் வெகுமதி வழங்கி பாராட்டு தெரிவித்தார்.**



சென்னை காசிமேடு, சிங்காரவேலன் நகர் 3 வது தெரு என்ற முகவரியில் ரம்யா, (வயது 22), கணவர் பெயர் தேசமுத்து என்பவர் வசித்து வருகிறார். கடந்த 11–ந் தேதி அன்று இரவு இந்த வீட்டில் ரம்யா, அவரது மாமியார், ராதிகா, (வயது 61) மற்றும் இரண்டு குழந்தைகளுடன் தூங்கி கொண்டிருந்த போது, அதிகாலை (12–ந் தேதி) சுமார் 2 மணியளவில் மழையின் காரணமாக வீட்டின் மேற்கூரை ஆஸ்பெட்டாஸ் சீட் சரிந்து விழுந்துள்ளது. தகவலறிந்த காசிமேடு காவல் நிலைய சுற்றுக்காவல் ரோந்து வாகன சிறப்பு உதவி ஆய்வாளர் மணிவண்ணன் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று வீட்டிற்குள் காயமடைந்து இருந்த ரம்யா, அவரது மாமியார் ராதிகா மற்றும் இரண்டு குழந்தைகளை பத்திரமாக மீட்டு பொதுமக்கள் உதவியுடன் வெளியே கொண்டு வந்தார். தலையில் காயமடைந்த ரம்யா சிகிச்சைக்காக ஸ்டான்லி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். ரம்யாவை பரிசோதித்த டாக்டர்கள் தலையில் காயமடைந்துள்ளதால் ஸ்கேன் எடுக்க அறிவுறுத்தியுள்ளனர். ரம்யாவிடம் போதிய பணம் இல்லாததால் இந்த சிறப்பு உதவி ஆய்வாளர் மணிவண்ணன் இதர மருத்துவ செலவிற்கு ராம்யாவிடம் ரூ.1,000 கொடுத்து உதவி செய்துள்ளார்.

சென்னை பெருநகர போலீஸ் கமிஷனர் அ.க.விசுவநாதன், தக்க சமயத்தில் உதவி செய்து திறம்பட பணிபுரிந்த சிறப்பு உதவி ஆய்வாளர் மணிவண்ணனை நேரில் அழைத்து வெகுமதி வழங்கி பாராட்டினார்.



**சிதம்பரம் சப் கோர்ட்**
I.A.No.86/2016
in
U/N,C.M.A.No. /2016

சிதம்பரம் தாலுக்கா சீராப்பாளையம், 354, மெயின் ரோடில் வசிக்கும் கிருஷ்ணமூர்த்தி மகன் கோபி.
...மனுதாரர்/அப்பீல்வாதி

எதிர்

1. சிதம்பரம் தாலுக்கா, சீராப்பாளையம் கன்னி கோயில் தெருவில் வசிக்கும் பழனிவேல் மனைவி வனிதா
ஆர்.2/2ம் அப்பீல் எதிர்மனுதாரர்

2. சிதம்பரம் டவுன் ஆரணி அம்மன் கோயில் தெருவில் வசிக்கும் சக்திவேல் மனைவி வாசுகி
ஆர்.3/3ம் அப்பீர் எதிர்மனுதாரர்

**மேற்படி 2 மற்றும் எதிர்மனுதாரர்களுக்கு தெரிவித்துக் கொள்வதாவது:–**

சிதம்பரம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஐ.ஏ.நெ.667/2014 இன் ஓ.எஸ்.227/2014ல் 29.10.2015 தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் மனுதாரர் மேற்படி சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளார். மேற்படி மேல் முறையீடு வழக்கு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 61 நாட்கள் காலதாமதத்தை Sec.V Limitation Actன்படி மன்னிக்கக்கோரி ஐ.ஏ.நெ.86/2016ல் மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு ஈரங்கி 21.08.2017 அன்று உள்ளது. ஆட்சேபணை இருப்பின் அன்று காலை 10 மணிக்கு மேற்படி கோர்ட்டில் ஆஜராகி தெரிவிக்கவும். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக மேற்படி மனுவின் பேரில் உத்தரவாகிவிடும் என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

A.K. **நடராஜன்**
வழக்கறிஞர்.





## ஓரியண்ட் க்ரீன் பவர் கம்பெனி லிமிடெட்

Corporate Identification Number (CIN) - L40108TN2006PLC061665

பதிவு அலுவலகம்: 4வது தளம், சிகப்பி ஆச்சி கட்டிடம், 18/3, ருக்மணி லட்சுமிபதி ரோடு, எழும்பூர், சென்னை–600 008.

Visit us at : http://www.orientgreenpower.com/ இ–மெயில்: complianceofficer@orientgreenpower.com

**10வது வருடாந்திர பொதுக்கூட்டம், தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு தகவல் மற்றும் புத்தகம் மூடல் பற்றிய அறிவிப்பு**

கம்பெனியின் பத்தாவது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவலை செயல்படுத்த கம்பெனி உறுப்பினர்களின் பத்தாவது வருடாந்திர பொதுக்கூட்டம் புதன்கிழமை, 09 ஆகஸ்ட 2017 அன்று மாலை 3.00 மணிக்கு காமகோடி ஹால், ஸ்ரீ கிருஷ்ண கான சபா, 20, மகாராஜபுரம் சந்தானம் ரோடு, தி.நகர், சென்னை –600 017ல் நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

பத்தாவது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பின் காகித நகல்கள், 31 மார்ச் 2017ல் முடிந்த ஆண்டுக்கான தணிக்கை கணக்குகள் அடங்கிய ஆண்டறிக்கை மற்றும் இயக்குனர்கள், தணிக்கையாளர்களின் அறிக்கை மற்றும் கூட்டு நிறுவன ஆளுகையின் அறிக்கை ஆகியவை இமெயில் முகவரியை பதிவு செய்யாத உறுப்பினர்களுக்கும், தொடர்பு நோக்கத்திற்காக கம்பெனி/முதலீட்டு பங்கேற்பாளரிடம் இமெயில் முகவரிகளை பதிவு செய்த உறுப்பினர்களுக்கு மின்னணு முறையிலும் அனுப்பும் பணியை கம்பெனி 14 ஜூலை, 2017 அன்று முடித்துள்ளது.

கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 108, திருத்தப்பட்ட கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014ன் விதி 20 மற்றும் செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015–ன் விதி44ன்படி (SEBI LODR), 30 ஜூன், 2017 தேதியிட்ட வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அனைத்து தீர்மானங்கள் மீதும் மின்னணு முறையில் அதன் உறுப்பினர்கள் வாக்களிப்பதற்கான வசதியை கம்பெனி அளித்துள்ளது. சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் லிமிடெட் (CDSL) அளிக்கும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு சேவையை கம்பெனி பெற்றுள்ளது. கூட்டத்தில் வாக்குச்சீட்டு மூலம் வாக்களிக்கும் வசதியும் உள்ளது. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் ஏற்கனவே வாக்களிக்காத உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்களிக்கலாம்.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு நடைமுறைகள் நேர்மையாகவும் வெளிப்படையான முறையிலும் நடைபெற திருமதி. பி. சந்திரா, பிராக்டிசிங் கம்பெனி செயலாளர்கள், சென்னை அவர்களை ஆராய்வாளராக கம்பெனியின் இயக்குனர்கள் குழு நியமனம் செய்துள்ளது. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வியாழக்கிழமை, ஆகஸ்ட் 03, 2017 (இந்திய நேரப்படி காலை 9.00 மணி) தொடங்கி செவ்வாய்க்கிழமை, ஆகஸ்ட் 08, 2017 அன்று (இந்திய நேரப்படி மாலை 5.00 மணிக்கு) முடிவடைகிறது. அதன் பிறகு தொலைதூர மின்னணு வாக்குப்பதிவை CDSL செயலிழக்க செய்துவிடும். ஒரு தீர்மானத்தின் மீது உறுப்பினர் வாக்களித்துவிட்டால் அதனை பின்னர் மாற்ற அவர் அனுமதிக்கப்படமாட்டார். கட் ஆப் தேதியான 2 ஆகஸ்ட், 2017 அன்று உறுப்பினர்கள் வைத்துள்ள சமபங்குகள் எண்ணிக்கையின்படி வாக்களிக்கும் உரிமை இருக்கும். 07 ஜூலை 2017 அன்று உறுப்பினர் பதிவேடு/டெபாசிட்டரி பதிவேட்டில் கண்டுள்ள பெயர்களில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு அனுப்பிய பிறகு ஆனால் கட்ஆப் தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கம்பெனியின் உறுப்பினரானவர் helpdesk.evoting@cdslindia.com/rnt.helpdesk@linkintime.co.in/ complianceofficer@orientgreenpower.comக்கு கோரிக்கை அனுப்பி லாகின் ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெற்றுக் கொள்ளலாம்.

அறிவிப்பு மற்றும் ஆண்டறிக்கையை பெறாத உறுப்பினர்கள் கம்பெனியின் இணையதளம் http://www.orientgreenpower.comலிருந்து படியிறக்கம் செய்து கொள்ளலாம்/அல்லது சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் லிமிடெட் (CDSL) இணையதளம் i.e. https://www.evotingindia.com/. லிருந்து அறிவிப்பினை படியிறக்கம் செய்து கொள்ளலாம்.

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் அச்சிடப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு தொடர்பான வழிமுறைகளை கவனமாக படிக்குமாறு உறுப்பினர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மின்னணு வாக்குப்பதிவு சம்பந்தமாக ஏதேனும் சந்தேகம்/அக்கறை/குறை இருப்பின் அது குறித்து கம்பெனி செயலாளர் – 4வது தளம், சிகப்பி ஆச்சி கட்டிடம், 18/3, ருக்மணி லட்சுமிபதி ரோடு, எழும்பூர், சென்னை–600 008 Tel. :+91-44-4901 5678, E-mail ID: complianceofficer@orientgreenpower.com என்ற முகவரிக்கு எழுதலாம்

வருடாந்திர பொதுக்கூட்டத்தில் செயல்படுத்தப்பட உள்ள அலுவல் அயிட்டங்கள் தொடர்பான ஆவணங்களை கம்பெனியின் வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும் நாள் வரை திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை அலுவல் நேரத்தில் பார்வையிடலாம்.

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 91 மற்றும் செபி எல்ஓடிஆர்–ன் விதி 42ன்படி, கம்பெனியின் பத்தாவது வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறுவதையொட்டி கம்பெனியின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு பரிமாற்ற புத்தகங்கள் வெள்ளிக்கிழமை, 04 ஆகஸ்ட் 2017 முதல் புதன்கிழமை, 09 ஆகஸ்ட், 2017 முடிய (இரண்டு நாட்களும் சேர்த்து) மூடப்பட்டிருக்கும்.

இயக்குனர்கள் குழுவின் ஆணைப்படி
பி. ஸ்ரீனிவாசன்
கம்பெனி செயலாளர்

இடம்: சென்னை
தேதி: 17.07.2017

குறிப்பு: கூட்டத்தில் ஆஜராகி வாக்களிக்க தகுதி உள்ள ஒரு உறுப்பினர் தனக்கு பதிலாக பதிலியை அனுப்பி வாக்களிக்க வைக்கலாம். பதிலி கம்பெனியின் உறுப்பினராக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஐம்பதுக்கு (50) மிகாமல் மற்றும் கம்பெனியின் மொத்த பங்கு மூலதனத்தில் பத்து சதவீதத்திற்கு மிகாமல் பங்குகளை வைத்துள்ளவர்களுக்கு அவர்கள் சார்பாக ஒரு பதிலி வாக்களிக்க உரிமை உள்ளது. கம்பெனியின் மொத்த பங்கு மூலதனத்தில் பத்து சதவீதத்திற்கு அதிகமாக வைத்துள்ள வாக்களிக்கும் உரிமை உள்ள உறுப்பினர் ஒரு நபரை பதிலியாக நியமனம் செய்யலாம். இதர நபர் அல்லது பங்குதாரரருக்கு பதிலியாக அந்த நபர் செயல்பட முடியாது. மேற்சொன்ன கூட்டம் நடைபெறுவதற்கு 48 மணி நேரம் முன்பாக முறையாக பூர்த்தி செய்யப்பட்ட பதிலி படிவங்களை கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

# Breaking Bihar

V.V.S.Manian

The people of India have shown that they will support leaders who fight corruption. So it is time for the government to stand against those who want to steal from the country and stand with the people - Racheal Hanna in Harvard Political Review 2013.

I was a strong supporter of J.Jayalalithaa and used to send her some suggestions to be included in her manifesto just before elections. She was a very determined leader and did what she could despite her physical ailment, mental stress and habits. Now the people of Tamil Nadu are groping and trying to find out why things have gone pell-mell in the state and how sly money is flowing freely like water to make amends in politics and to buy stability. Tamil Nadu is not under the microscopic eye of the centre and media due to its peculiar political scenario where visible and invisible factors are fighting for survival with money and muscle power. The winner would perhaps be the clean one, if we can find one. The status in various states also changes due to the sudden awareness of ending corruption and punishing the corrupt politician.

India has come to the boiling point where no one will tolerate corruption and youth are understanding the gravity of the problem. Now I am with BJP and raise my voice against corruption as it has to end. Otherwise the country would go to dogs. Watching the upsurge against the most corrupt Congress, people have started saying that they will lead the anticorruption war. Unfortunately, the generals of the war were themselves once up to their neck in corruption.

BJP has righty commenced the war against corruption and has no choice but to prove that it will not spare anyone. Time is short for this marathon job but must be done if it wants to win the massive



mandate to continue. The recent development in Bihar is in the right direction as Nitish after a long spell finally decided that he will not brook corruption. He is well aware that Lalu's family is posing a challenge to his dream of progress and a 'clean Bihar' pursuits. Nitish is ready to take the challenge of a fresh election to get a clear mandate.

In his quest to continue as the Chief Minister, Nitish took a broom to sweep his assembly clean, though belatedly. Bihar Chief has been able to maintain a clean image since 2005. He, as member of Janata Dal Party has proved his mettle by increasing the size of the police force and fast tracking successfully the prosecution of over 79,000 criminals in 2005. He would like to maintain his stature of 'honest and corrupt free' chief with a clean government. He is also known for good governance, "Suhasan Babu" and is said to have established zero tolerance towards corruption. He found that his image was getting beaten with Lalu Prasad Yadav's opportunistic company. He vowed to get rid of the bad element from his cabinet. He wanted Lalu's son to quit.

Lalu Prasad Yadav is annoyed with Nitish for asking his son's resignation. Lalu expects the support of Akhilesh Yadav and Mayawati to fight the BJP. If this happens, the complexion of the 2019 general election will change. Being a smart politician, Nitish is playing well thought chess moves. He has supported the NDA candidate for presidential elections but supports the opposition candidate for vice -presidential candidate. He distances himself from Lalu's rally against the BJP and initiates action against RJD following the raids. Lalu is upset over the raids and called the action as political vendetta. He is planning a crusade against the BJP for catching his family red-handed.

**Magathbandhan myth**

The situation is Bihar is that the JD (U) has 71 MLA's, RJD 81, Congress 2, and BJP 53 MLA's. If RJD walks out, Nitish is likely to get the outside support of BJP. If Nitish Kumar survives the acid test and continues, it will be a blow to Congress which is banking on a wafer thin hope for the throne in Delhi. Magathbandhan turns a myth. No wonder, Congress is trying to patch up between Nitish and Lalu by evolving a compromise formula. It depends upon the exit of Tejashwi. RJD is in a tight spot in Bihar politics- whether in or out.

The situation as it appears today, is definitely advantageous to BJP, both in Patna and Delhi. The Mahagathbandhan rests on the 'love' between Nitish and Lalu. It was good in the initial days which saw the sociability of the two hugging leaders coming together to give pep to Bihar's progress. Sonia also cheered them up as it would give a fresh momentum to decaying Congress. Now the Enforcement Directorate and CBI has spoiled the future aspiration of Lalu and Congress. It is their own making.

**Bright future for BJP**

BJP is also well aware that this change in the scenario is advantageous to them. Lalu as a shrewd politician knows that if Nitish takes a moral position and goes with BJP, it is the end of his family's political aspirations. Nitish is also playing safe by saying that there would be no break up of Mahagathbandhan. He also made it explicit that he is not in the race as a probable opposition candidate to lead the campaign as Prime Ministerial candidate. It is an indication that he would align with the BJP in the next general elections. By adapting this strategy, Nitish will be able to maintain his 'clean image'. The Congress will be in a fix, as such developments will divide secular votes and ruin the prospects of the so called united opposition in the general election of 2019. Congress is trying hard to keep Nitish in its fold.

It is now apparent that Nitish will go back to BJP from whom he parted company in 2013. Such action will be good for Bihar and for India. Will it happen?

# China conducts fire drills in Tibet

Beijing, July 17: China's military has conducted live-fire exercises in Tibet amid the ongoing standoff+ between Indian and Chinese troops at the Dokalam area in the Sikkim sector+ .

The People's Liberation Army (PLA) conducted live-fire exercises in Southwest China's Tibet Autonomous Region, state-run China Central Television (CCTV) reported on Friday, without mentioning the exact timing of the drills.

The brigade that conducted the drills+ was from the PLA's Tibet Military Command and is one of China's two plateau mountain brigades, Global Times reported today.

The PLA Tibet command guards the Line of Actual Control (LAC) of the India-China border along several sections connecting the mountainous Tibetan region.

According to the CCTV report, the brigade has long been stationed around the middle and lower reaches of the Brahmaputra (Yarlung Zangbo in Chinese) River which flows into India and Bangladesh and is responsible for frontline combat missions+ .

The live-fire drills included the quick delivery of troops and different military units working together on joint attacks.

Video posted online showed soldiers using anti-tank grenades and missiles against bunkers and howitzers for artillery coverage.

The video also showed radar units identifying enemy aircraft and soldiers using anti-aircraft artillery to destroy targets. The drills lasted 11 hours.

Separately, Tibet's mobile communication agency conducted a drill on July 10 in Lhasa, capital of Tibet, where members of the agency practiced setting up a temporary mobile network to secure communications in an emergency.

Earlier reports said the PLA units exercised with several modern weapon systems including a new light battle tank being manufactured by China. Is your home ready for the monsoons?

Bajaj AllianzDeposit Rs. 25 and win awesome bonuses!

Junglee RummyRecommended By Colombia

China and India have been engaged in a standoff in the Dokalam area in the Sikkim sector, where Indian troops stopped road construction by Chinese soldiers on June 16.

China has been demanding immediate pull-out of the Indian troops from the disputed Dokalam plateau.

Doka La is the Indian name for the region which Bhutan recognises as Dokalam, while China claims it as part of its Donglang region.

Of the 3,488-km-long India-China border from Jammu and Kashmir to Arunachal Pradesh, a 220-km section falls in Sikkim.

# Indians top asylum seekers in New Zealand

New Delhi, July 17: Indians are among the top asylum seekers in New Zealand (NZ), shows a recent OECD report on migration. And it is among the countries with the most immigration applicants in Australia, Finland, Japan, Latvia, Slovak Republic, the UK and US as well, according to 2016 data.

According to the International Migration Outlook 2017 report by global think tank OECD, comprising 35 member-countries, between 2012 and 2016 top asylum seekers to NZ were from China, India, Fiji and Iraq.

Indians have been applying for asylum in more than 40 countries for several years now, according to the office of the United Nations High Commissioner for Refugees (UNHCR). Indians stranded in places such as Cisarua in Indonesia, a refugee hub, have even attempted to travel by boat to NZ.

In 2015 and 2016, OECD countries recorded the highest number of asylum applications since the World War II.And, almost half of the asylum seekers originated from three countries -Syria, Afghanistan and Iraq. Other applicants came from Pakistan, Iran and Sub-Saharan Africa.

But why does India figure on this list when the political and the economic situation in the country is relatively better than those mentioned above? Reasons vary , say experts, ranging from students overstaying their visas, low skilled job seekers to refugees seeking resettlement.

"Anyone can ask for asylum but it may not be granted. People might apply when they are caught trying to cross a border illegally,"says Jonathan Chaloff, policy analyst, International Migration Division at OECD. Asked if Indian students who overstayed their visas could have applied for asylum, he says, "Yes, because it delays deportation. They have a chance of staying. They are also able to extend their stay while they wait for their application to be processed, even if it's rejected," he adds.

In Latvia, a small country in Europe, with a population of around two million, of the 6,200 registered international students in 2015-16, the largest proportion was from India and Uzbekistan, at 18% each. Last year, the OECD report says, 20 Indians requested for asylum in Latvia."In Latvia there were 20 applications for asylum, and there were 20 Indians caught trying to cross the border. They might be the same people," says Chaloff.

## 27 die in Congo boat mishap

Kinshasa, July 17: At least 27 people have perished and 54 are missing after an overcrowded boat sank in a river in the Democratic Republic of Congo, a local official said today.

Most of the victims of the tragedy on the Kasai river were students on holiday, local administrator Jacques Mbila said.

The main reasons for the sinking were "overcrowding and drunk drivers", Mbila added.

The accident happened overnight Thursday to Friday on the river Congo in the Idiofa area in the southwest of the vast country. Local radio journalist Nelly Mafuta said she saw two nuns among the 27 dead, and the Idiofa cathedral said it held a mass in tribute to the victims.


NAME CHANGE

I, NARAYANASWAMY PERUMAL, S/o: Perumal, Date of Birth: 11.05.1954, residing at No.139/64, Kalathiappa Street, Choolai, Chennai–600 112, shall henceforth be known as **NARAYANASAMY PERUMAL.**

**NARAYANASWAMY PERUMAL**

NAME CHANGE

I, BAVANI DEVI, S/o: Prasad Kumar, Date of Birth: 24.06.1981, residing at Old No.2/1, G1, Sarathy Castle, No.64, Ashoka Avenue, 1st Main Road, Jawahar Nagar, Chennai–600 082, shall henceforth be known as **P.BHAVANI DEVI.**

**BAVANI DEVI**

NAME CHANGE

I, KM ASATHA CHATURVEDI, D/o: Prabhat Kumar Chaturvedi, Date of Birth: 15.07.1993, residing at D3, MIG Flats, Fore Shore Estate, Chennai– 600 028, shall henceforth be known as **ASATH CHATURVEDI.**

**KM ASATHA CHATURVEDI**

NAME CHANGE

I, LAKSHMI THULASI(Hindu), W/o: Naseeruddin Ahamed, Date of Birth: 21.05.1978, residing at No.3B, R.S.R.Garden, Pattur Mangadu, Kancheepuram, Chennai–600 122, Has converted Hindu to Islam with the name of **AAYESHA FATHIMA (ISLAM).**

**LAKSHMI THULASI (HINDU)**

PASSPORT LOST

This is to inform to the general public that I have lost my passport bearing No. K 7890334 issued on 16.01.2013 by RPO/Chennai at Ennore. Finder/s is/are requested to hand over the same to me at the below mentioned address: No.48/80, 4th Street, Annai Sivagami Nagar, Ennore, Thiruvallur–600 057. Finders will be rewarded suitably.

**JOTHI LAKSHMI**

/Air Edition/

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, VILUPPURAM, Tamil Nadu, India**
**O.S.No. 1 / 2015**

Kalaichelvi @ Selvi w/o Krishnan, Hindu, house-wife aged about 50 years and resident of No. 76, Pondy to Chennai Main Road, Pudupattu Village, Soonambedu Post, Seiyur Taluk, Kanchipuram District.

.... Plaintiff

Versus:

(1) Janakiraman (2) Ramu @ Kothandaraman both sons of Kannaiyan, Hindu, aged about 55 years 45 years respectively, and residents of Bommaiyarpalayam madura Kuilapalayam Village, Vanur Taluk, Viluppuram District and now residing at # 777, ELSBREE ST., FALL RIVER, MASSACHUSETIS 02072-U.S.A. (Phone No: 001-508-730-7286)

.... Defendants

**NOTICE TO DEFENDANTS 1 AND 2**

Take Notice that the above Suit for partition filed by the plaintiff has been posted on 24-07-2017 (TWENTY FOURTH day of July, 2017) for your appearance before this Hon 'ble Court by 10.00 am by yourself or by your pleader or by someone by law authorized to act for you in this suit. If no appearance is made on your behalf on the said date, the suit will be heard in your absence and an exparte judgment will be the suit will be heard in your absence and an exparte judgment will be pronounced

**K.P.PALANIAPPAN,BSc.,B.L.,**
No.12, V.O.C. Street, Viluppuram- 605 602,

**IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS**
**(Testamentary and Intestate Jurisdiction)**
**O.P. No. 820 of 2016**

In the matter of the Indian Succession Act XXXIX of 1925
and
In the matter of the Last will and Testament of Veluswamy (Deceased)

Mrs. V. Amuthavalli
AG8- Akilandeswari Apartments
No.7, Cart Track Road,
Velacherry, Chennai - 600 042. .. Petitioner

All persons claiming to have any interest in the estate of the above named V.Veluswamy who was residing at AG8- Akilandeswari Apartments,No.17, Cart Track Road,Velacherry, Chennai - 600 042 and died on 26.03.2013 are hereby cited to come and see the proceedings before the Learned Master sitting in the Original Side of High Court of Judicature at Madras on 11.08.2017 at 10.30 a.m. and file this objections, if they think fit before the grant of probate.

Dated at Chennai on this the 28 day of June 2017

M/s. C. Ramesh
C. Balaji
Advocate,
No.70, Law Chambers
High Court Buildings
Chennai

K.Arivalagan
Asst. Registrar
Original Side
High Court,
Chennai - 600 104.

NAME CHANGE

My Son, GOPALAKRISHNAN KAARTHI, Date of Birth: 25.01.2012, residing at Plot No.2212, AF Block, 7th Street, 11th Main Road, Anna Nagar West, Chennai–600 040, shall henceforth be known as **GOPALAKRISHNAN ANITHA KAARTHI.**

**ANITHA,** Mother

INTEGRAL COACH FACTORY

**INDIAN RAILWAYS**

**Tender Notice No. ICF/FD/CONTRACT/OT/002/2017-18**

For and on behalf of The President of India, the Controller of Stores/ICF invites sealed Tenders for operation of Yale make Reach Truck available at Furnishing Depot of Integral Coach Factory, Chennai - 600 038.

| Sl. No. | Tender No. | Description | Qty. |
|---|---|---|---|
| 1. | ICF/FD/CONTRACT/OT/002/2017-18 | Operation of Yale Make Reach Truck at Furnishing Depot for a period of 3 years **(Approximate value of the contract Rs.7.17 lakhs)** | 1 No. |

| | |
|---|---|
| Cost of Tender Form | : **Rs. 3,000/-** |
| EMD | : **Rs. 35,850/-** |
| Place of Purchase of Tender Documents | : **Office of the Dy.CMM/FD** |
| By Post | : Plus Rs. 500/- to be paid |
| Timings | : From Monday to Friday (Timing Hours 8.30 to 17.30) |
| Period of Contract | : 3 years |
| Last Date & Time of issue of Tender Document | : **Up to 12.00 Hrs. on 08.08.2017** |
| Date & Time of Closing of Tender | : **14.00 Hrs. on 08.08.2017** |
| Date & Time of Opening of Tender | : **14.30 Hrs. on 08.08.2017** |
| Place of Tender Opening | : **CMM/Fur. Office** |
| Validity of Tender | : Minimum 90 Days from the date of opening of Tender |

Remarks : (1) Tenderer shall submit EMD amount and cost of Tender Schedule by D.D separately. (2) DD should be drawn in favour **of FA&CAO/ICF** (Cheques are not accepted). (3) If the Date of Opening is declared holiday, Tender will be opened at the same time on the next full working day. (4) Tender documents can be downloaded from ICF website **"www.icf.indianrailways.gov.in"**

SERVING CUSTOMERS WITH A SMILE

PUBLIC NOTICE

It is informed by our client HDFC Ltd, that one Mr Chandran U had availed a housing loan with them and the same was secured by deposit of documents pertaining to House No. M-4, Sudarsan Gardens, Door No.102, Velacherry Road, Guindy, Chennai- 600032 (Morefully described in the schedule here under). It is further informed by our client that the Sale Deed Doc.No.3563/1988 and Sale Deed Doc.No.3/1997 have been misplaced by them. Any person coming across such document or any person having any objection or claim by virtue of being in possession of the original title document may kindly contact the undersigned in writing with relevant proof within ten days from the date of publication of this notice failing which it would be presumed that none has any claim or right whatsoever.

Schedule

All the piece and parcel of property bearing Flat No. M-4 in First floor, in Block-M in the building known as 'Sudarsan Gardens' in the premises bearing Door No. 102(part), Velacherry Road, Guindy,
Chennai- 600 032 measuring 940 sq.ft of built up area together with 1/84 undivided share of land out of total extent 21 ground and 255 sq.ft comprised in paimash Nos105/1, Patta No. 65, T.S.No. 9/1 to 9/5, Block No.9, Adayar Village, Saidapet Taluk bounded on Northy by property belongs to Mr P.M. Joseph, East by partly the property belongs to MIS Conch Chits and Commercial corporation (p) Ltd., and partly Velacherry road, South by property belongs to Mr Kumarayya and Mrs Grace Kuruvilla Jacob and West by Narasu Nagar situated within the Registration District of Chennai-South and Sub- registration district of Adayar

**K.J. Parthasarathy,** Advocate
Room No. 14, III Floor, S.M. Plaza,
Old No. 45/58, New No. 93/58,
Armenian Street, Chennai- 600 001

NAME CHANGE

I, VS.SHRI PRIYA S.SHRI PRIYA SRIPRIYA SRINIVASAN, D/o: K.V.Srinivasan, Date of Birth: 15.08.1974, residing at 11, Majestic Apartments, 48, Arcot Road, Saligramam, Chennai–600 093, shall henceforth be known as **SHRI PRIYA SRINIVASAN.**

**VS.SHRI PRIYA S.SHRI PRIYA SRIPRIYA SRINIVASAN**

NAME CHANGE

My Daughter, SHRUTHI VINOTHKUMAR MEENAKSHI, Date of Birth: 17.06.2006, residing at No.6, Dr. Annie Besant Street, V.O.C. Nagar, Pammal, Chennai–600 075, shall henceforth be known as **SHRUTHI MEENAKSHI.**

**MEENAKSHI KRISHNAN,** Mother

OGP

**ORIENT GREEN POWER COMPANY LIMITED**

Corporate Identification Number (CIN) - L40108TN2006PLC061665
**Regd. Office:** 4th Floor, Sigappi Achi Building, 18/3, Rukmini Lakshmipathi Road, Egmore, Chennai - 600 008.
Visit us at: http://www.orientgreenpower.com/ E-mail: complianceofficer@orientgreenpower.com

**NOTICE OF 10TH ANNUAL GENERAL MEETING**
**INFORMATION ON REMOTE E-VOTING AND BOOK CLOSURE**

Notice is hereby given that the Tenth Annual General Meeting (AGM) of the Members of the Company is scheduled to be held on **Wednesday, 09 August 2017 at 3.00 P.M. at Kamakoti Hall, Sri Krishna Gana Sabha, 20, Maharajapuram Santhanam Road, T.Nagar, Chennai-600 017** to transact the business contained in the Notice of Tenth AGM of the Company.

The Company has on 15th July, 2017 completed the dispatch of the physical copies of the Notice of Tenth AGM, Annual Report containing audited accounts for the year ended 31st March 2017 and the Reports of the Auditors and Directors along with Report on Corporate Governance to the members who have not registered their e-mail address and also sent the same, through electronic means to the Members whose E-mail ID's are registered with the Company / Depository Participants for communication purposes on 14th July, 2017.

In compliance with the provisions of Section 108 of the Companies Act, 2013 and Rule 20 of the Companies (Management and Administration) Rules, 2014, as amended, and Regulation 44 of the Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 [SEBI LODR], the Company is pleased to provide e-voting facility to its Members enabling them to cast their vote electronically for all the resolutions as set in the AGM Notice dated 30th June, 2017. The Company has availed the e-voting services as provided by Central Depository Services Limited (CDSL). The facility for voting, through ballot paper is made available at the meeting and Members attending the meeting who have not already cast their vote by remote e-voting shall be able to exercise their right at the meeting.

The Board of Directors of the Company has appointed Mrs. B Chandra, Practicing Company Secretaries, Chennai, as Scrutinizer for conducting the voting process in a fair and transparent manner. The e-voting period commences on Thursday, August 03, 2017 (9.00 a.m. IST) and ends on Tuesday, August 08, 2017 (5.00 p.m. IST). The e-voting module shall be disabled by CDSL, for voting thereafter.

Once the vote on a resolution is cast by the Member, the Member shall not be allowed to change it subsequently. The voting rights of Members shall be as per the number of equity shares held by the members as on the cut-off date which is 2nd August, 2017. The Notice has been sent to all the Members, whose names appeared in the Register of Member / Record of Depositories as on 07th July, 2017. In case of persons who become members of the Company after the dispatch of AGM Notice but on or before the cut-off date may write an E-mail to helpdesk.evoting@cdslindia.com/ rnt.helpdesk@linkintime.co.in/ complianceofficer@orientgreenpower.com for obtaining login ID and password.

Members who have not received Notice and the Annual Report, may download the same from the website of the Company through the link. http://www.orientgreenpower.com/ or download the Notice from the website of Central Depository Services Limited (CDSL), i.e. https://www.evotingindia.com/.

The members who have cast their vote by remote e-voting prior to the Annual General Meeting may also attend the meeting but shall not be entitled to cast their vote again.

The Members are requested to read the instructions pertaining to e-voting as printed in the AGM Notice carefully. Any query/concern/grievances connected with voting by electronic means, if any, may be addressed to the Company by writing to the Company Secretary - 4th Floor, Sigappi Achi Building, 18/3, Rukmini Lakshmipathi Road, Egmore, Chennai - 600 008, Tel. :+91-44-4901 5678, E-mail ID: complianceofficer@orientgreenpower.com.

The documents pertaining to the items of the business to be transacted in the AGM are open for inspection at the Registered Office of the Company during the normal business hours from Monday to Friday upto the date of Annual General Meeting of the Company.

Pursuant to the provisions of Section 91 of the Companies Act, 2013 and Regulation 42 of SEBI LODR, the Register of Members and the Share Transfer books of the Company will remain closed from Friday, 04 August 2017 to Wednesday, 09 August 2017 (both days inclusive) for the purpose of the Tenth AGM of the Company.

**By Order of the Board of Directors**
**Place** : Chennai **P.Srinivasan**
**Date** : 17.07.2017 **Company Secretary**

**Note:** A member entitled to attend and vote at the meeting may appoint a proxy to attend and vote instead of himself/herself and such proxy need not be a member of the Company. A person can act as proxy on behalf of Members not exceeding fifty (50) and holding in the aggregate not more than ten percent of the total share capital of the Company carrying voting rights. A Member holding more than ten percent of the total share capital of the Company carrying voting rights may appoint a single person as Proxy and such person shall not act as Proxy for any other person or shareholder. The proxy form duly completed must be returned so as to reach the registered office of the Company not less than 48 hours before the time of commencement of the aforesaid meeting.